IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No. 62/2021 Date: 03.02.2025

PW1-மாதேஸ்வரி

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நானும் பிரதிவாதிகளும் செட்டிப்பட்டி ஊரை சேர்ந்தோர்கள் என்றால் சரிதான். நாங்கள் இடையர் தெருவிலும், பிரதிவாதிகள் வன்னியர் தெருவிலும் வசிக்கிறோம். நாங்கள் வசிக்கும் இடையர் தெரு காவேரிப்பட்டி கிராமத்திலுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் வசிக்கும் வன்னியர் தெரு அரசிராமணி கிராமத்திலும் வருகிறது என்றால் சரிதான். என் வீடும் பிரதிவாதிகளின் வீடும் நடந்து செல்லும் தூரத்தில் உள்ளது. பிரதிவாதிகள் என் கணவருக்கு பங்காளி உறவு முறை. அதனால் எனக்கு பிரதிவாதிகளின் குடும்ப விவரம், சொத்து விவரமும் தெரியும். தாவா சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது. அது நான்கு ச.எண்களில் உள்ளது. அந்த சொத்துக்கள் அனைத்தும் மாரிமுத்துகவுண்டருக்கு பாத்தியப்பட்டது. அவருக்கு பெருமாள், ஆனந்தன் ஆகியோர் மட்டும் வாரிசுகள். ஆனந்தன் இறந்துவிட்டார். 1 ம் பிரதிவாதியின் மனைவிக்கு தாவா சொத்தில் உரிமையில்லை என்றால் எனக்கு தெரியாது. நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வேலைக்கு செல்வதில்லை. என் கணவர் விவசாய துறையில் ஆராய்ச்சி பணியாளராக உள்ளார். என் கணவரின் சம்பள விவரம் எனக்கு தெரியாது. என் கணவரின் சம்பளம் மட்டும் தான் எங்களுக்கு வருமானம் என்றால் சரிதான். என் கணவர் வருமான வரி செலுத்துகிறார். அதில் அவருடைய கடன் கொடுக்கல், வாங்கல் விவரங்களையும் காண்பித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது. )

Sd/-மாதேஸ்வரி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.